RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1414

OPEN ACCESS

# அ. வெண்ணிலா கவிதைகளை முன்வைத்து பெண், ஆண் அந்தரங்க அரசியல்

ந. சங்கரநாராயணன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம், திண்டுக்கல்-624302, தமிழ்நாடு, இந்தியா.

# Female, Male Intimate Politics - Presenting Aa. Vanilla Poems

N. Shankaranarayanan [a, *]

[a] Department of Tamil, Gandhigram Rural Deemed to be University, Gandhigram, Dindigul–624302, Tamil Nadu, India

* Corresponding Author: shankarma.86@gmail.com

Received: 26-12-2021
Revised: 29-09-2022
Accepted: 05-10-2022
Published: 29-11-2022

Check for updates

## ABSTRACT

Works for women are not perfected by being written by a man. Starting from Bharathi in Tamil Nadu, various literary writers have been recording their voices against female slavery in literature. Feminists consider those words to be male voices for themselves. Starting from the Sangam period, the state of female writing can be seen as the gap between the mountain and the basin. To be more specific, history tells us that women's writings from the Sangam period started to decline drastically in the Middle Ages. The women's community, which has been struggling for many years to express its presence, has become compelled to prove a place for itself in today's environment. Yet if women do not express our ideology, freedom for womanhood will disappear like her dreams, so many women writers today have started recording their views through literature. In this way, A. Vennila conveys the instincts of women in his works in a beautiful feminine language. This article describes the way in which A. Vennila's works present the fact that a woman is seen as an object of consumption not only in the kitchen but also during intimate meetings with men and women.

**Keywords:** Intimate Politics, Domination, Sex

## முன்னுரை

தமிழ் மொழிச்சூழலில் மனிதன் என்ற சொல்லுக்கு இணையான 'மனுஷி' என்ற ஒரு பதத்தைத் தனக்காக உருவாக்குவதற்கே (பெறுவதற்கே) இருபது நூற்றாண்டுகள் ஆகிவிட்டது பெண்மைக்கு. பெண் தனது பரந்தவெளியை வீட்டிலுள்ள ஜன்னல் கம்பிகளின் ஊடாகவே காணுகின்றாள். அவளுடைய கனவுகளும் ஆசைகளும் ஆணாதிக்கச் சமூகத்தால் முடக்கப்பட்டு; வீட்டின் படிதாண்டாத குழந்தைகளாகவும் தாயாகவும் பத்தினியாகவும் வாழ்ந்து தனது வாழ்வை முடித்துக்கொள்கின்ற ஒரு அவல நிலையே உலகம் தோன்றிய நாள் முதல் இன்றுவரை இருந்து வருகின்றது. தமிழகத்தில் பாரதி தொடங்கி பல்வேறு இலக்கியவாதிகளும் பெண் அடிமைத்தனத்திற்கு எதிரான தங்களது குரல்களை இலக்கியங்களில் பதிந்து வருகின்றனர். அவையெல்லாம் தனக்கான ஆணின் குரல்களாக உள்ளன என பெண்ணியவாதிகள் கருதுகின்றனர். சங்ககாலம் தொடங்கி பெண் எழுதுதல் என்ற நிலை காணப்படினும்; அவையாவும் மலைக்கும் மடுவுக்குமான இடைவெளியாகும். இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமெனில் சங்ககாலத்திலிருந்த பெண் எழுத்துக்கள் ஏனோ இடைக்காலத்தில் வெகுவாகக் குறையத்தொடங்கி விட்டநிலையே வரலாறு நமக்கு உணர்த்துகின்றது. தனது இருப்பை வெளிப்படுத்துவதற்குப் பல ஆண்டுகளாப் பேராடிக்கொண்டிருக்கும் பெண் சமூகம்; இன்றைய சூழலில்

தனக்கான ஓர் இடத்தை தானே நிருபிக்கொள்ள வேண்டிய கட்டாயத்தேவை எழுந்துள்ளது. இன்னும் நாம் நமது கருத்தியலை வெளிப்படுத்தவில்லை எனில் பெண்மைக்கான சுதந்திரம் என்பது அவள் கனவுகளைப் போலவே காணாமல் போய்விடும் என்றெண்ணி; இன்று பல பெண் எழுத்தாளர்கள் தங்கள் கருத்துக்களை இலக்கியத்தின் வழியாகப் பதிவுசெய்யத் தொடங்கியுள்ளனர். காலங்காலமாகப் பெண்மை அனுபவித்து வரும் வலிகள், வேதனைகள், தங்களுடைய ஆசைகள், கனவுகள், சுதந்திரநாட்டில் சுதந்திரமின்மை, பாலியல் வன்முறைகள், பாலியல் தேவைகள், உடல்சார்ந்த பிரச்சினைகள் போன்றவற்றை தங்களது இலக்கியங்களின் கருத்தியல்களாக அமைத்துக் கொள்கின்றனர். அதிலும் குறிப்பாக தங்களுடைய பாலியல் சார்ந்த கருத்துருவாக்கத்தை வெளிப்படுத்துவதற்கு கவிதை எனும் இலக்கியவடிவத்தை இலகுவாக அவர்களால் கைகொள்ள முடிகின்றது. அவ்வகையில் கவிஞர் அ. வெண்ணிலா பெண்மைக்கான ஒருவெளியைத் தனது கவிதைகளில் அமைத்துக்கொள்கின்றார். அவர் எழுதிய ‘நீரிலலையும் முகம்’ எனும் கவிதைத் தொகுப்பின் வழியாக அவர் வெளிப்படுத்துகின்ற அந்தரங்க அரசியல் குறித்து இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

## அந்தரங்க அரசியல்

மனிதர்களாகப் பிறந்த அனைவருக்கும் உரிமைகள் என்பது பொதுவானவை. சமூகத்தில் கல்வி, பணி, கருத்துச்சுதந்திரம் என அனைத்து நிலைகளிலும் ஆணாதிக்கச் சமூகத்தால் பெண் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றாள். சமூகத்தில் அவள் குரல் ஓங்கவில்லை எனினும் தான் அடக்கப்(அடைக்க)பட்டுள்ள வீட்டிலாவது முழுசுதந்திரம் உண்டென்றால் இல்லை. ஒரு சிறைக்கைதி சிறையை விட்டு வெளியே செல்லமுடியாது எனினும் தான் இருக்கின்ற நான்கு சுவர்கள் கொண்ட அறைக்குள் தனது முழுசுதந்திரத்தையும் அனுபவிக்க உரிமையுண்டு. ஆனால் பெண்ணுக்குத் தான் சிறையாகிய வீட்டில் கூட இப்படித்தான் பேச வேண்டும், நடக்கவேண்டும் எனப் பலகட்டுப்பாடுகள்.

“இன்று

நான் பெரிய பெண்

உரத்துச் சிரித்தல் கூடாது

…………………………………………………….

கதைத்தல் சிரித்தல்

பார்த்தல் நடத்தல்

உடுத்தல் எல்லாம்

இன்னபடிஎன்றெழுதி”

என்ற அ. சங்கரியின் கவிதைகள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன (Ananda Kumar, Sundar, 2019). இந்நிலை தாண்டி ஆண், பெண் தனிமையில் தங்கள் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கின்ற அந்தரங்க வேளையிலும் அவள் தனக்கானச் சுதந்திரமின்மையை உணர்கின்றாள் என்பது பெண்ணியவாதிகளின் கருத்தாக அமைகின்றது. தனிமையில் உடல்சார்ந்த தேவைக்காக ஆண், பெண் கூடுகின்ற நேரத்தில் எவ்விதமான அரசியல் அங்கு அரங்கேருகின்றது என்பதை உணர்த்துவதற்காகப் பெண்ணியவாதிகள் குறிப்பிடும் ஒரு சொல்லாட்சியே (Bedroom Politics) அந்தரங்க அரசியல். இச்சொல்லை ஓரினச்சேர்க்கையாளர்களும் தங்களுடைய சுயத்தில் அரசாங்கம் தலையிடுவதைக் குறிப்பிடுவதற்குக் கையாள்கின்றனர். இக்கட்டுரையில் பெண், ஆண் பாலியல் கூடலின் போது பெண்ணின் உடல் அங்கு எவ்வாறு அரசியல் (அதிகாரத்திற்கு உட்படுதல்) ஆக்கப்படுகின்றது; அவள் மனம் எவ்வாறு ஆண் அதிகாரத்தால் நொறுக்கப்படுகின்றது என்பதையும் விளக்குவதாக அமைகின்றது.

## பெண் உடல் மீது அதிகாரத்திணிப்பு

பெண் என்பவள் தனக்கான எந்தவித உயிர்ப்புமின்றி ஒரு ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமுதாய உயிரியாக விளிம்புநிலையில் வாழ்ந்து வருகின்ற சூழலே உலகில் நிலவுகின்றது. அவள் உடல் மீதான அரசியல் என்பது அவள் அறியாமலே ஆண்டாண்டுகாலமாக நிகழ்ந்தவண்ணம் உள்ளன. தனிமையில் பெண் x ஆண் பாலுறவின் போது ஒரு ஆண் தனக்கான முழுஅதிகாரத்தையும் பெண்ணின் உடல்மீது செலுத்துகின்றான். அந்த அறையில் அவளது உணர்வுகள் முழுவதுமாக மறுக்கப்படுகின்றன. பெண்ணின் உடல் தேவைகளையோ அவளது உள்ளத் தேவைகளையோ பூட்டிய அறைக்குள் ஆண் கருத்தில் எடுத்துக்கொள்வதில்லை. “ஒரு ஆண் இரவில் மட்டும் தனக்குத் தேவையான இன்பத்தை அனுபவிக்க வேட்டைப் பொருளாகப் பெண்ணைக் கருதுகின்றான். இரை தேடும் விலங்கு இரையாகும் பொருளிடம் சம்மதம் பெறுவதில்லை” என்று கனிமொழி கவிதைகள் குறித்து விமர்சிக்கும்போது குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது (Ganasekaran, 2014). தனது காமநுகர்வுக்கு உருவாக்கப்பட்ட ஒரு கருவியாக மட்டுமே பெண்ணின் உடல் ஆணால் பார்க்கப்படுகின்றது. ஆணின் தேவை முடிந்தவுடன் பெண் தேவையற்ற நிர்வாண சடலமாக அங்கு கிடக்கின்றாள். ஆணின் காமத்தீயில் அவள் உடலோடு அவள் உணர்வுகளும் எரிக்கப்படுகின்றன. இக்கருத்தினை அ. வெண்ணிலா தமது கவிதையில் மிக நுட்பமாகப் பதிவுசெய்கிறார்.

“விபத்தாகத்தான் இருக்கும்

சிலந்தி வலையில்

சுருண்டிருந்தது அந்த மரவட்டை

என்னதான் ஆகும்

வியப்போடு நாட்கள் உருள்கையில்

கீழ்த்தள்ளப்பட்டது ஒருநாள்


வெளுத்துப்போன உடலோடு

வண்ணங்களைச் சுரண்டும்

வன்முறை

எங்குதான் இல்லாமலில்லை”

இக்கவிதையில் ஆணைச் சிலந்தியாகவும் பெண்ணை மரவட்டையாகவும் உவமித்து உள்ளார். மேலும் வன்முறையே ஆண், பெண் சந்திக்கும் தனியறையில் நடப்பதாகக் கருதுகின்றார் (Vennila, 2015). “பெண்கள் மீதான வன்முறைகள் என்பது தந்தைவழிச் சமூக உறவுகளினூடாக வெளிப்படுவதால் இத்தகைய வன்முறைகள் சமூக நடைமுறையாக்கப்பட்டுள்ளன. அதாவது எங்கெல்லாம் சமத்துவமற்ற நிலை நீடிக்கிறதோ அங்கே வன்முறை வெளிப்படுகின்றது” (அரங்க மல்லிகா, 2002) என்று அரங்க மல்லிகா குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது.




தனியறையில் பெண் x ஆண் சந்திப்பு என்பதை ஒரு விபத்தாகக் குறிப்பிடுகின்றார். சிலந்தி வலையில் அகப்பட்ட ஒரு மரவட்டையாக பெண் அன்றாடம் தனது அந்தரங்க உறவை ஆணுடன் களிக்க வேண்டியுள்ளது. அவள் விருப்பம் கேட்டு அவளுடனான உறவு நிகழ்வதில்லை. மாறாக ஆணின் அதிகாரத்திற்கு கட்டுப்பட்டு வீட்டுவேலைகளைச் செய்வதைப் போன்றே பெண்ணின் அந்தரங்க உறவும் அமைந்துள்ளது. அவளுக்கான உணர்வுகளும் தனியறையில் நசுக்கப்படுவதுடன் அவளது உடல் ஆணின் காமநுகர்வுக்கு உட்படுத்தப்பட்டு சிலந்தி வலையில் அகப்பட்ட மரவட்டையின் இரத்தம் எவ்வாறு சிலந்தியால் உறியப்பட்டு ஒருநாள் வெற்று கூடாக மரவட்டை கீழே தள்ளப்படுகின்றதோ

அதுபோல பெண்ணும் உடலளவிலும் பாதிப்புக்கு உள்ளாகின்றாள் என்பதை அ. வெண்ணிலா தனக்கே உண்டான பெண்மொழியில் எடுத்துரைக்கின்றார்.

## முடிவுரை

இவ்வுலகம் ஆணை மையமாக வைத்துக்கொண்டு பெண்ணை அவனுக்காகப் படைக்கப்பட்ட ஒரு உயிராகவே பார்த்து வருகின்றது. ஆணின் அதிகாரக் குரலுக்கு அடங்கி வீட்டுவேலைகள் செய்வதை மட்டும் பெண் அடக்கமுறையாகச் சித்திரித்த ஆண்மைய சமூகத்தில் தனியறையில் ஆண், பெண் உடனான அந்தரங்க உறவுநிலையில் கூட பெண் அடக்கப்படுவதை இன்றைய பெண்மொழி எழுத்துகள் வெளிப்படுத்துவதைக் காணமுடிகின்றது. அந்தரங்க அரசியல் களத்தில் பெண் தனக்கான சுயத்தை இழப்பதுடன் தனது உணர்வுகள் மதிக்கப்படாமல் ஆணால் வெறும் உடலாக மட்டும் பார்க்கப்பட்டு வருகின்ற நிலையை அ. வெண்ணிலா தனது கவிதைகளில் முன்வைக்கின்றார். பாலியல் நுகர்வுக்காகப் பயன்படும் ஒரு கருவி போல பெண்ணின் உடலும் ஆண் மையமிட்ட சமுகத்தால் பார்க்கப்பட்டு வருகின்ற சூழலைப் பெண்மொழியால் மட்டுமே உணர்த்த முடியும் என்பதை அ. வெண்ணிலா கவிதைகள் நமக்கு வெளிபடுத்துகின்றன.

## References

Ananda Kumar, P., Sundar, K. (2019) Illakkiyaththirattu, New Centuries Book House, Chennai, India.

Ganasekaran, T. (2014) Pen Vazhakkaarukal, New Centuries Book House, Chennai, India.

Vennila, A. (2015) Nirilalaiyum Mugam, Pavai Publication, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License